சுற்றுநிருபம் : 11/2008

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வட மாகாணம்
26.06.2008

வட மாகாணத்திலுள்ள
அனைத்து கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும்

கூட்டுறவு ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி செலுத்துதல்

அரச ஊழியர்களுக்கு 01.01.2006 இலிருந்து வழங்கப்பட்ட ரூபா 1000/= வாழ்க்கைச் செலவுப்படி, 01.07.2006 இலிருந்து வழங்கப்பட்ட ரூபா 375/= வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பு என்பவற்றை உள்ளடக்கி வாழக்கைச் செலவுப்படியாக ரூபா 1375/= கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு எமது 65/2006 இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வழங்கப்பட்டு வருகின்றது. எனினும் அதன் பின்னர் அரச ஊழியர்களுக்கு 01.01.2007 இலிருந்தும், 01.07.2007 இலிருந்தும், 01.01.2008 இலிருந்தும் வழங்கப்பட்டுவரும் வாழக்கைச் செலவுப் படியினையும், 01.07.2008 இலிருந்து வழங்கப்பட வேண்டிய வாழக்கைச் செலவுப் படியினையும், அவ்வத்திகதிகளிலிருந்து கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு கீழ்வரும் நிபந்தனைகளுக்கமைய வழங்குவதற்கு வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

1. கிராமிய வங்கியின் இலாபத்தினைத் தவிர்த்து, சங்கம் சுயமுயற்சியால் இலாபம் ஈட்டுமாயின் சங்கத்தின் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் மாதாந்தம் 01.01.2007 இலிருந்து ரூபா 1750/= வையும், 01.07.2007 இலிருந்து ரூபா 2125/= வையும், 01.01.2008 இலிருந்து ரூபா 2500/= வையும், 01.07.2008 இலிருந்து ரூபா 2875/= வையும் வாழ்க்கைச் செலவுப் படியாக அவ்வத்திகதிகளிலிருந்து வழங்குதல் வேண்டும்.

2. தற்காலிக, நாளாந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படியை வழங்கும் போது அவர்கள் வேலை செய்த நாட்களின் அடிப்படையில் 01.01.2007 இலிருந்து நாளொன்றுக்கு ரூபா 58.34 படி மாதமொன்றிற்கு ரூபா 1750/= என்ற வரையறைக்கு உட்பட்டும், 01.07.2007 இலிருந்து நாளொன்றுக்கு ரூபா 70.83 படி மாதமொன்றிற்கு ரூபா 2125/= என்ற வரையறைக்கு உட்பட்டும், 01.01.2008 இலிருந்து நாளொன்றுக்கு ரூபா 83.33 படி மாதமொன்றிற்கு ரூபா 2500/= என்ற வரையறைக்கு உட்பட்டும், 01.07.2008 இலிருந்து நாளொன்றுக்கு ரூபா 95.83 படி மாதமொன்றிற்கு ரூபா 2875/= என்ற வரையறைக்கு உட்பட்டும் கணிப்பீடு செய்து செலுத்தப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிடப்படும் திகதிகளிலிருந்து வாழ்க்கைச் செலவுப்படியை வழங்குவதற்கு சங்கங்களினால் ஈட்டப்பட்ட இலாபம் போதுமானதாக இல்லாது விடின் கொடுப்பனவுகள் வழங்கப்படலாகாது என்பதை சங்கங்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இச்சுற்றுநிருபம் வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

2008.06.20 ந் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி :
01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.
03. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்